**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 06/2021**

வாதி தரப்பு சாட்சியாக DW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரகாஷ் | Father Name | : | மகாலிங்கம் |
| Village | : | மங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | இளநிலை உதவியாளர்-TNCSC |
| Religion | : | | Age | : | 45 |

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் முதல் பிரதிவாதியாவேன். இவ்வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். கடந்த 15.05.1996 ம் தேதி எனது தகப்பனாரின் பெயரில் ஏற்பட்ட கிரய ஒப்பந்த ஆவணத்தின் அசல் **பி.வா.சா.ஆ.3 ஆக** (வாதி தரப்பில் ஆட்சேபணையுடன் ) குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 12.02.2017ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு விவசாயக் கடன் பெற நான் அளித்த விண்ணப்பத்தின் அசல் **பி.வா.சா.ஆ.4 ஆகவும்,** கடந்த 22.02.2021 ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் பெயரில் தாவா சொத்தின் மீது பெற்ற கடன் தள்ளுபடி செய்ததற்கான சான்றிதழ்

**பி.வா.சா.ஆ.5 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். (வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.04 19:03:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.